



எழும்பூர் முதல் சென்ட்ரல் வரை சுரங்கப்பாதையில் மெட்ரோ ரெயிலில் மகிழ்ச்சியுடன் பயணம் செய்யும் பயணிகள்.

## மெட்ரோ ரெயில்

# இலவச பயணத்துக்காக அலை மோதிய கூட்டம்

# குடும்பத்தோடு பயணித்து குதூகலம்

அயல்நாடுளில் வலம் வந்து கொண்டிருந்த மெட்ரோ ரெயில் சென்னையிலும் 2 வருடமாக ஒசை யின்றி ஓடிக் கொண்டிருக்கிறது.

பூமிக்கடியில் எப்படி ரெயில் ஓடும் என்பதை கடந்த வருடம் சென்னை மக்கள் கண்டு அனுபவித்தனர். பகுதி பகுதியாக சேவையை தொடங்கிய மெட்ரோ ரெயில் தற்போது நிறைவு கட்டத்தை எட்டியுள்ளது.

சென்ட்ரல் முதல் விமான நிலையம் வரை சேவையை தொடங்கி சென்னை மக்களின் போக்குவரத்து நெரிசலுக்கு முற்றுப்புள்ளி வைக்கிறது.

பூமிக்கு அடியில் சுரங்கப் பாதையில் ரெயில் எப்படி ஓடும் என்பதை சென்னை மக்கள் பிரமிப்பாக பார்த்தாலும் தமிழகத்தின் பல்வேறு பகுதியில் உள்ள மக்களுக்கு இது ஒரு வியப்பாக இருந்து வருகிறது.

சென்னை மற்றும் புறநகர் பகுதி மக்கள் மெட்ரோ ரெயிலில் ஒரு முறையாவது பயணம் செய்ய வேண்டும் என்ற ஆசை உள்ளது.

வெளியூர்களில் இருந்து சென்னைக்கு வருபவர்கள் மெட்ரோ ரெயில் நிலையத்தை ஒரு சுற்றுலா தலமாகவே கருதுகிறார்கள். சென்னை யில் உள்ள சுற்றுலா மையங்களின் வரிசையில் இப்போது மெட்ரோ ரெயிலும் இடம் பெற்றுள்ளது என்றால் மிகை



குடும்பத்தினருடன் பயணம் செய்யும் ஜோபிரட்.

உற்சாகத்தில் ஆழ்த்தி உள்ளது. இன்று காலையிலே மெட்ரோ ரெயிலில் பயணம் செய்ய மக்கள் படையெடுக்க தொடங்கி விட்டனர். சென்ட்ரல், எழும்பூர், அண்ணாநகர், கோயம்பேடு உள்ளிட்ட அனைத்து நிலையங்களிலும் மக்கள் நடமாட்டம் அதிகமாக இருந்தது.

எப்போதும் வெறிச்சோடி காணப்பட்ட மெட்ரோ ரெயில் நிலையங்கள் காலை 10 மணிக்கு

தி.மு.க. தலைவர் கருணாநிதி கொண்டு வந்தார். நடுத்தர மக்கள் மட்டுமில்லாமல் ஏழை மக்களும் பயன் பெற வேண்டும். அதனால் கட்டணத்தை குறைக்க வேண்டும். எல்லோரும் பயணம் செய்யக்கூடிய வகையில் கட்டணம் இருந்தால்தான் நல்லது. வசதி படைத்தவர்கள் மட்டும் பயன்படுத்துவதாக இருக்கக்கூடாது. கட்டணத்தை குறைத்தால் ஏழை, நடுத்தர

ஏறி சென்ட்ரல் வரை பயணம் செய்து விட்டு மீண்டும் திரும்பி செல்கிறோம். ரொம்ப சந்தோச மாக இருக்கிறது. ஏதோ வெளிநாட்டில் பயணம் செய்வதைபோல உணர்ந்தேன். போக்குவரத்து நெரிசல் மிகுந்த சென்னையில் மெட்ரோ ரெயில் பயணம் கால நேரத்தை கட்டாயம் மிச்சப்படுத்தி கொடுக்கும்.

ரபிக்:-



நான் தனியார் நிறுவனத்தில் வேலை பார்க்கிறேன். இன்று இலவச பயணம் என்பதால் மெட்ரோ ரெயிலில் பயணம் செய்கிறேன். கட்டணம் அதிகம் நிர்ணயித்து இருக் கிறார்கள். அதனை குறைத்தால் நல்லது. மேலும் சுரங்க மெட்ரோ ரெயில் நிலையங்களில் செல்போன் நெட்ஒர்க் இல்லை. இது தகவல் தொடர்புக்கு இடையூறாக உள்ளது. ரெயிலில் பயணம் செய்யும் போதும் செல்போன் நெட்ஒர்க் கிடைக்கவில்லை. அதனை சரி செய்ய வேண்டும்.

ரோஷ்னி ([illegible]):-

யலலை.

வெளியூர்களில் இருந்து சென்னையில் உள்ள உறவினர் வீடுகளுக்கு வருபவர்கள் மெட்ரோ ரெயிலில் பயணம் செய்வதை ஒரு கனவாக கொண்டுள்ளனர். குழந்தைகள், சிறுவர்கள், பெரியவர்கள் வரை அனைவரையும் மெட்ரோ ரெயில் நிலையங்கள் கவர்ந்துள்ளது.

கண்ணாடி மாளிகைக்குள் சென்று வருவது போன்ற ஒரு உணர்வை ஏற்படுத்தி உள்ளத்திற்கு குதூகலத்தை தருகின்றது.

ஒரு கட்டுப்பாட்டு அறையில் இருந்தவாறு எல்லாவற்றையும் கண்காணித்து இயக்கப்படும் மெட்ரோ ரெயில் சேவை ஒரு புதுமையான அனுபவத்தை தந்து கொண்டிருக்கிறது. மெட்ரோ ரெயிலில் பயணம் செய்வோரின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருகின்ற நிலையில் சென்ட்ரல், எழும்பூர் நிலையங்கள் நேரு பூங்கா வுடன் நீட்டிப்பு செய்து புதிய சேவையை தொடங்கி உள்ளது.

அதே போல பரங்கிமலையில் இருந்து தேனாம்பேட்டை டி.எம்.எஸ். வரை சேவை தற்போது தொடங்கி இருப்பதால் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கவும் வாய்ப்பு உள்ளது.

சென்னை மக்களை மெட்ரோ ரெயில் பயணத்தில் இணைக்கும் வகையில் மெட்ரோ ரெயில் நிறுவனம் பண்டிகை காலங்களில் விசேஷ சலுகைகளை அளித்து வருகிறது. தற்போது புதிய சேவை தொடங்கி இருப்பதால் 2 நாட்களுக்கு முழுமையாக பயணம் இலவச மாக்கப்பட்டுள்ளது. இன்றும் நாளையும் மெட்ரோ ரெயிலில் எங்கிருந்தும் எந்த இடத்திற்கும் செல்லலாம் என்று அறிவிக்கப்பட்டதால் மக்கள் கூட்டம் நிரம்பி வழிகிறது.

சென்ட்ரலில் இருந்து விமான நிலையம் வரை ஒருவர் செல்ல ரூ.70 கட்டணம் என்று நிர்ணயிக்கப்பட்ட நிலையில் மெட்ரோ ரெயில் பயணத்தை மக்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இந்த இலவச பயணத்தை அனுமதித்துள்ளது.

மெட்ரோ ரெயில் நிலையத்தில் கால் வைத்தாலே கட்டணம் செலுத்தியாக வேண்டும். அப்படிப்பட்ட சூழ்நிலையில் இன்றும், நாளையும் இலவச பயணம் அறிவிப்பு சென்னை மக்களை மேலும் பரபரப்பாக்கி விட்டது. குழந்தைகள், பெரியவர்கள் என குடும்பம், குடும்பமாக பயணம் மேற்கொண்டனர்.

கோடை கால விடுமுறைக்கு சென்னைக்கு வந்த மக்கள் பலர் மெட்ரோ ரெயிலில் குடும்பமாக பயணம் செய்தனர். சுற்றுலா தல வரிசையில் இப்போது மெட்ரோ ரெயிலும் இணைந்து இருப்பதாக கருதி அதில் பயணம் செய்ய ஆர்வமாக இருக்கிறோம் என்று கூறினர்.

சென்னைவாசிகள் மட்டுமின்றி வெளியூர் மக்களும் குளுகுளு ஏ.சி.ரெயிலில் கட்டண மின்றி இலவசமாக பயணம் செய்ய தங்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பு கிடைத்துள்ளது என்று தெரிவித்தனர்.



**சரவணன் (செங்கல்பட்டு):-** நான் குடும்பத் தோடு வந்து இருக்கிறேன். மெட்ரோ ரெயிலில் பயணம் செய்ய வேண்டும் என்று நீண்ட நாளாக ஆசை இருந்தது. இப்போது விடுமுறை காலமாக இருந்ததால் குழந்தைகளை அழைத்து வந்து உற்சாகப்படுத்தினேன்.

விமான நிலையத்தில் இருந்து சென்ட்ரல் வரை கட்டணமில்லாமல் பயணம் செய்தோம். இந்த நாள் மகிழ்ச்சியான நாள். வளர்ந்த நாடுகளை போல நம் நாட்டிலும் இதுபோன்ற திட்டங்களை கொண்டு வந்தது வரவேற்க கூடியது. ஆட்டோ, கால் டாக்சியை விட மெட்ரோ ரெயில் கட்டணம் குறைவு தான். பாது காப்பான பயணம், வசதியாக, நெரிசல் இல்லா மல் செல்ல முடிகிறது.



**சீனிவாசன் (புரசைவாக்கம்):-** இந்த திட்டத்தை மக்களும் பயன் பெறுவார்கள்.

**ஜோபிரட் (நாகர்கோவில்):-** நான் உறவினர் திருமணத்திற்காக குடும்பத்தோடு சென்னை வந்தேன். இங்கு வந்ததால் மெட்ரோ ரெயிலில் பயணம் செய்ய வேண்டும் என்று எல்லோரும் விரும்பினார்கள். அதனால் இந்த வாய்ப்பு கிடைத்தது. இது சொகுசான பயணமாக இருக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. ரெயில் நிலையங்களில் பயணிகளுக்கு பாதுகாப்பு, பெட்டியில் வசதி என எல்லாமும் சிறப்பாக உள்ளன. இதை மறக்க முடியாத பயணமாக கருதுகிறேன். குடும்பத்தோடு சந்தோசமாக அனுபவிக்கிறோம்.

சென்னையில் இருப்பது போல மற்ற நகரங்களுக்கும் மெட்ரோ ரெயில் வசதியை விரிவுப்படுத்த வேண்டும். பயணம் செய்வதற்கு எளிதாக இருக்கிறது. குறைந்த நேரத்தில் சென்று விட முடியும். பயண நேரம் நிறைய மிச்சமாகும்.



**ஹேமா (கோயம் பேடு):-** நான் சாப்ட்வேர் என்ஜினீயராக பணிபுரிந்து வருகிறேன். இதுவரையில் பஸ்சில்தான் சென்று வருவேன். மெட்ரோ ரெயிலில் பயணம் செய்தால் நேரம் மிச்சமாகும் என கருதி அதனை ஆய்வு செய்வதற்காக இன்று ரெயிலில் பயணம் செய்ய வந்தேன். என் மகனும் மெட்ரோ ரெயிலில் பயணம் செய்ய ஆசைப்பட்டான். அதனால் அவனையும் அழைத்து கொண்டு வந்தேன். வேலைக்கு செல்வதற்கு எனக்கு உதவியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

**பெண் போலீஸ் புஷ்பா (வாலாஜா):-** நாங்கள் குடும்பத்துடன் சுற்றிப் பார்க்க சென்னைக்கு வந்தோம். மெட்ரோ ரெயில் பயணம் செய்ய குழந்தைகள் விரும்பினார்கள். விமான நிலையத் தில்

பி.இ. படித்து முடித்து விட்டு நேர்காணலுக்காக இன்று சென்றேன். பாரிமுனைக்கு



பஸ்சில் செல்வதாக இருந்தால் நேரமாகும் என்பதால் திருமங்கலம் வந்து அங்கிருந்து மெட்ரோ ரெயிலில் பயணம் செய்தேன். குறிப்பிட்ட நேரத்திற்குள் செல்ல முடிந்தது. நெரிசல் இல்லாமல் பயணிக்க முடிந்தது. குறித்த நேரத்திற்கு செல்வதற்கு மெட்ரோ ரெயில் பயணம் உதவியாக இருந்தது.

**கே.எஸ். ரமேஷ் (புதுச்சேரி):-** நான் கம்ப்யூட்டர் விற்பனை செய்யும் தொழில் செய்கிறேன். அடிக்கடி சென்னைக்கு வருவேன். தாம்பரத்தில் இருந்து பாரி முனை வருவதற்குள் பெரும்பாடு ஆகி விடும்.



ஆனால் இன்று மெட்ரோ ரெயிலில் விமான நிலையத்தில் இருந்து எழும்பூர் வந்தேன். நெரிசல் இல்லாமல் பயணம் செய்ய முடிந்தது. தொழில் ரீதியாக சென்னைக்கு வரும் பலருக்கு இது மிகவும் பயன் உள்ளதாக அமையும்.



பெண் போலீஸ் புஷ்பா.